2005 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 143, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

143—

தொழிற்பயிற்சிப் பயிலகம்

* **6687—திரு. எஸ். எம். பாலன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடியில் அரசு தொழிற்பயிற்சிப் பயிலகம் தொடங்க ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) லால்குடி தாலுகாவில் ஏற்கெனவே 3 தொழிற்பயிற்சிப் பயிலகங்கள் இயங்கி வருவதால், லால்குடியில் அரசு தொழிற்பயிற்சிப் பயிலகம் துவங்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. எஸ். எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதியில், லால்குடி ஒன்றியத்தில் ஆண்கள் மட்டும் பயிலும் 2 தனியார் I.T.I.-கள் செயல்படுகின்றன. லால்குடி தொகுதி, புள்ளம்பாடியில் ஒரு அரசு பெண்கள் I.T.I. செயல்படுகிறது. லால்குடி நகரப் பகுதியில் அரசு பெண்கள் I.T.I. ஒன்றிருந்தால், லால்குடி ஒன்றிய கிராமப்புறத்தில் வசிக்கும் ஏழையெளிய பெண்கள் மேம்பாடு அடையும் விதத்தில், அவர்கள் குறைந்த தூரத்தில், தொழிற்கல்வி படிக்க வசதியாக இருக்கும் என்பதால், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அது துவக்கப்படுமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லால்குடி தாலுகாவிலுள்ள புள்ளம்பாடியில் 168 இருக்கைகளைக் கொண்ட மகளிருக்கான அரசுத் தொழிற்பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. ஆகவே, லால்குடிக்கென்று தனியாக ஒரு அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் துவங்க அரசுக்கு உத்தேசம்

[2005 மார்ச் 14

இல்லை. மேலும், லால்குடியில் மகளிருக்கென்று தொழிற்பயிற்சி நிலையம் துவங்க தனியார் எவரேனும் முன்வந்தால், நிச்சயமாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு அது கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் சமீப காலமாக மாணவர்கள் சேர்வதில் ஆர்வம் குறைந்து வருகிறது. இப்படி ஆர்வம் குறைந்து வருவதற்குக் காரணம், படித்த பிறகு அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. எனவே வேலைவாய்ப்புடன்கூடிய தொழிற்பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அரசு தொழிற்பயிற்சி மையங்கள் 57. தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் 615. இவற்றில் பெரும்பாலான பள்ளிகளில் அதிகமான மாணவர்கள் பயின்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 144, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

144—

மேல்நிலைத் தொட்டி

***23289—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, மகாதேவபட்டினம் கிராமத்தின் தேவை கருதி, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?